# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# இரண்டாந் தவணைப் பரீட்சை - 2017

| தரம் : 11 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : 3.00 மணி |
| --- | --- | --- |
| | பெயர் / சுட்டெண் ................................................ | |

## பகுதி I

☞ **கவனிக்க**

* **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
* **1 - 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் 1,2,3,4 என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குமுரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

☞ **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. "அற்றைத் **திங்கள்** அவ்வெண்ணிலவில் --------" இங்கு திங்கள் என்பதன் கருத்து
    1. மாதம் 2. சந்திரன் 3. நாள் 4. கிழமை

02. "முத்துதிர நகை செய்யும் சொத்தாகும் **மழலை** --------" இங்கு மழலை என்பதன் கருத்து
    1. சிறுவன் 2. குழந்தை 3. முத்து 4. இளைஞன்

03. **அறம்** தானே என்கின்ற அயல் நின்றாள் தனை நோக்கி ------- இங்கு அறம் என்பதன் எதிர்க்கருத்து
    1. புறம் 2. தர்மம் 3. மறம் 4. அகம்

04. ஆரம்பத்தில் கம்பியூட்டருடன் ஏற்பட்ட பிணக்கு நீங்கி ஓர் **இணக்கம்** ஏற்பட்டது. இங்கு இணக்கம் என்பதன் எதிர்ப்பதம்.
    1. ஒற்றுமை 2. பிணக்கம் 3. குதர்க்கம் 4. தர்க்கம்

05. **எயினன்** அம்பு தொடுத்தான். இங்கு எயினன் என்பதன் எதிர்ப்பால் சொல்
    1. எயினி 2. எயினள் 3. எயினை 4. எயிற்றி

06. "போதம் மூன்றும் நலம் செயும் நாடு". போதம் மூன்றினுள் அடங்காதது
    1. பிறப்பு 2. வாழ்வு 3. இறப்பு 4. தாழ்வு

07. Myth(மித்) என்ற கலைச் சொல்லின் தமிழ் வடிவம்
    1. தொன்மம் 2. புனைவு 3. தர்க்கம் 4. முறைமை

08. கட்டு. உறவு, மலம், கயிறு, பாசம் என்னும் பல பொருள் தரும் சொல்
    1. மெய் 2. உரம் 3. பந்தம் 4. பரி

09. புலிக்கு போத்து போல குதிரைக்கு
    1. குண்டு 2. வடவை 3. பிணா 4. கலை

The National e-learning Portal for The General Education

10. முப்பதாவது ஆண்டின் இறுதியில் கொண்டாடப்படும் விழா
1. மாணிக்கவிழா
2. முத்துவிழா
3. அமுதவிழா
4. பீங்கான்விழா

11. குற்றத்தை மறைத்தல் என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்
1. பூசி மெழுகுதல்
2. பொடி வைத்தல்
3. மட்டந்தட்டுதல்
4. பம்பரமாட்டுதல்

12. பிற்காலத் தேவைக்காகச் சேமித்து வைக்கப்படும் பொருள்
1. எய்ப்பில் வைப்பு
2. ஓம்படை
3. ஏகபோகம்
4. மானியம்

13. அறிஞர் பலர் கூடி வாதிடுங்களம்
1. விவாதம்
2. பட்டிமன்றம்
3. ஆய்வரங்கு
4. கருத்தரங்கு

14. ஒரு கூட்டத்தினர், ஒரு பொருளை அதற்குரிய சொல்லாற் கூறாது வேறு சொல்லாற் குறிப்பது
1. இடக்கரடக்கல்
2. மங்கலம்
3. குழூஉக்குறி
4. மரூஉ

15. "வீண் செலவு செய்யினும் அக்கணக்கையும் அறிந்திருத்தல் நன்று" என்னுங் கருத்தமைந்த பழமொழி
1. வளவனாயினும் அளவறிந்து அளித்துண்
2. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
3. விரலுக்குத் தக்கது தான் வீக்கம்
4. பாத்திரமறிந்து பிச்சையிடு

16. பயனற்ற முயற்சியில் ஈடுபடல் என்ற பொருள் தராத உவமைத் தொடர்
1. ஆற்றில் கரைத்த புளி போல
2. அக்கினியிற்பட்ட மெழுகு போல
3. புறக்குடத்தில் வார்த்த நீர் போல
4. விழலுக்கு இறைத்த நீர் போல

17. "வாழையடி வாழையாக" என்ற அருஞ்சொற்றொடரால் உணர்த்தப்படுவது
1. நன்றியுணர்வு
2. உபகாரத்தன்மை
3. பாரம்பரியத் தொடர்ச்சி
4. மாற்றமின்மை

18. வெட்ட வெளியில் தனியாகச் சென்றேன். இங்கு வெட்டவெளி என்பது
1. அடுக்குத்தொடர்
2. அடுக்கிடுக்குத்தொடர்
3. இரட்டைக்கிளவி
4. இணைமொழி

19. மிதமிஞ்சிய ஆசை ஆபத்தானது. மிதமிஞ்சிய என்பதற்கு நிகரான சொல்
1. முறைகேடான
2. அநீதியான
3. அளவுக்கதிகமாக
4. கணிசமான

20. பெயர்ச் சொல்லும் பெயர்ச்சொல்லும் சேர்ந்தமைந்த கூட்டுப்பெயர்
1. தொலைக்காட்சி
2. நீரேரி
3. ஏவுகணை
4. பறிமுதல்

21. கெடுதல், தோன்றல் விகாரங்கள் இடம்பெற்றுப் புணர்ந்த சொல்
1. பலாவிலை
2. பழச்சாறு
3. பழமரம்
4. பனையோலை

22. "மழை பொழியட்டும்" இதில் வரும் பொழியட்டும் என்பது
1. குறிப்புவினை
2. ஏவல்வினை
3. வியங்கோள்வினை
4. எதிர்மறை வினை

The National e-learning Portal for The General Education

23. பின்வருவனவற்றுள் பின்னொட்டாக அமையாதது

1. நோயாளி 2. உடன்பாடு
3. ஆட்டம் 4. அநீதி

24. முற்றாகவும், எச்சமாகவும் வரும் சொல்

1. பாயும் 2. பாய்ந்த
3. ஓடினான் 4. பாடு

25. இனி விடியும் என்பது

1. எழுவாய்த்தொடர் 2. பெயரெச்சத்தொடர்
3. இடைச்சொற்றொடர் 4. உரிச்சொற்றொடர்

26. ஆக்க வினையடையாக அமைவது

1. வேகமாக 2. மெல்ல
3. இன்று 4. நாளை

27. நான் அவரை எதிர்த்துப் பேசவில்லை.
அவரது பேச்சில் நியாயம் இருந்தது.
மேற்படி இரு வாக்கியங்களை இதே ஒழுங்கில் தர்க்க ரீதியாக இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

1. ஆகையால் 2. ஏனெனில்
3. ஆனாலும் 4. எனவே

28. "ப" என்ற எழுத்து உச்சரிப்பில் வேறுபடும் சொல்

1. நாம்பன் 2. ஆம்பல்
3. கோபம் 4. சாம்பல்

☞ **பொருத்தமற்ற உதாரணம் இடம் பெற்ற சொற் தொகுதியைத் தெரிவு செய்க.**

29. 1. முற்றுவினை - உண்டான், வருவான், சென்றேன்
2. எச்சவினை - வந்து, ஓடி, படித்த
3. பிறவினை - படிப்பித்தான், ஊட்டினான், கண்டான்
4. ஏவல் வினை - படி, போ, உண்

30. 1. மாற்றுப்பெயர் - தான், தாம், தன்
2. தொழிற்பெயர் - ஆடல், பாடல், பொரித்தல்
3. ஆக்கப்பெயர் - புத்திசாலி, கொடை, நோயாளி
4. வினையாலணையும் பெயர் - நடந்தவன், வந்தான், விழுந்தவனை

☞ **புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. பல்கலைக்கழகத்தின் தலைவர் ............................. ஆவார்.

1. வேந்தர் 2. ஆளுநர்
3. பீடாதிபதி 4. பணிப்பாளர்

32. ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலும் சனத்தொகை .............................. செய்யப்பட்டது.

1. மதிப்பீடு 2. கணிப்பீடு
3. ஆய்வு 4. இழப்பீடு

33. எவரும் போகக் கூடாதெனத் தடைவிதித்த போதும் அதிகாரி .......................... அளித்தார்.

1. கட்டளை 2. தண்டனை
3. உத்தரவு 4. விதிவிலக்கு

34. அகில இலங்கை இலக்கிய விழாவுக்கு யாழ்ப்பாணக் கிளையிலிருந்து ............................. ஐம்பது பேர் சென்றனர்.
   1. செயலாளர்
   2. பொருளாளர்
   3. தலைவர்
   4. பேராளர்

☞ **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35. இன்று ஜனாதிபதி தலைமையில் கூடும் அமைச்சரவை நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக விரிவாக ...............................
   1. ஆராய்ந்தது
   2. ஆராய்ந்தார்கள்
   3. ஆராயவுள்ளது
   4. ஆராய்வார்கள்

36. நீயும் என்னுடன் வந்தால் தான் அவர் அதை நம்பிக்கையுடன் .............................................
   1. ஒப்படைப்பார்
   2. ஒப்படைத்தனர்
   3. ஒப்படைத்தார்
   4. ஒப்படைத்தார்கள்

☞ **தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**

**ஆதவனும் கீழ்த்திசையில் தோன்றி விட்டான்**
**ஆகா ! இவ்வுலகமெலாம் அழகின் சோதி !**
**சீதமிகும் சோலையினில் தென்றல் வீசும்**
**செம்மலர்கள் முகந்திறந்தே தேனைச் சிந்தும்**
**மோதி விழும் வண்டுகளும் முழங்கும் பண்ணை**
**மூக்கினிலே மகரந்த வாசம் வீசும்**
**கீதமெல்லாம் குயிலுக்கே கிளிகள் பேசும்**
**கிளையிடையே தாவுகின்ற கதிரைக்கண்டே**

37. இப்பாடலில் குறிப்பிடப்படும் காட்சி
   1. சூரியோதயக்காட்சி
   2. நிலவுக்காட்சி
   3. மாலைக்காட்சி
   4. கடற்கரைக்காட்சி

38. வண்டுகள் பண்ணிசைப்பதற்குக் காரணம்
   1. தேனுண்டு
   2. கதிரைக்கண்டு
   3. கிளிப்பேச்சைக் கேட்டு
   4. இயற்கை அழகில் மயங்கி

39. சீதம் என்பதன் கருத்து அல்லாதது
   1. குளிர்ச்சி
   2. தண்மை
   3. குளிர்மை
   4. பாடல்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
   அ. அது உலகம் முழுவதற்கும் பொதுவான நீதிகளை எடுத்துரைக்கின்றது.
   ஆ. அவற்றுள் திருக்குறள் ஈடு இணை அற்றது.
   இ. அது பழமையான நாகரிகம் படைத்த நாடு.
   ஈ. அங்கே சங்க காலம் எனப்படும் பழங்காலத்திலிருந்து பல நூல்கள் தோன்றின.
   உ. தமிழ்நாடு பரத கண்டத்தின் தென் பகுதியில் உள்ளது.
   ஊ. அதனால் "உலகப் பொதுமறை" என்று போற்றப்படுகின்றது.

   1. இ,ஈ,அ,உ,ஆ,ஊ
   2. அ,ஆ,இ,ஊ,உ,ஈ
   3. உ,இ,ஈ,ஆ,அ,ஊ
   4. உ,ஈ,ஆ,அ,இ,ஊ

(40 புள்ளிகள்)



The National e-learning Portal for The General Education

## பகுதி - II

**(01) சுருக்கமான விடை எழுதுக.**

1. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
   ஆதியி னருளி னால் தருள்செயு முகிலாம்

2. நகை என்னும் சொல் பெயராகவும், வினையாகவும் அமையக்கூடிய வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைக்குக.

3. பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தக் குறியீடு கொண்டு அமைக்குக.
   எனக்குக் காது குத்தப் பாக்கிறியளே எனக்கு என்ன வயசிருக்கும் சொல்லுங்க பாப்பம்.

4. பின்வரும் வாக்கியத்திலுள்ள மயக்கத்தை நீக்கி எழுதுக.
   முன்னாள் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி விழாவுக்கு வருகை தந்தார்.

5. "என்னால் ஓவியம் வரையப்பட்டது"
   இதனைச் செய்வினை வாக்கியமாக எழுதுக.

6. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலையைக் குறிப்பிடுக.
   "பிய்த்துக் கொண்டு போயிற்று காற்று கதை பரப்ப"

7. மாலா கடைக்குச் சென்றாள்.
   மாலா கடையில் பொருள்களை வாங்கினாள்.
   மாலா வீடு திரும்பினாள்.
   மேலே உள்ள வாக்கியங்களை இணைத்து ஒரு வாக்கியமாக எழுதுக.

8. சுருக்கம ஒன்றை எழுதும் போது தவிர்க்க வேண்டியது.
   மையக்கருத்தை வெளிப்படுத்தல், உதாரணந்தருதல், தொடர்புபடுத்தல், தொகை மொழிகள் பயன்படுத்தல்

9. "கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்". இவ்வடியில் இடம்பெறும் சார்பெழுத்தை வகை சுட்டி எழுதுக.

10. தேனலர் சண்பக வாசம் வானுலகில் வெடிக்கும். இங்கு இடம்பெறும் அணி யாது?

(20 புள்ளிகள்)

**(02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலைப்பு இடுக.**

அ. இன்றைய காலத்து சிறுவர்களுக்கு விளையாட்டு என்றதும் தொலைபேசியில் உள்ள விளையாட்டுக்களையே கூறுவர். அத்தகைய விளையாட்டுக்கள் வீட்டின் அறைக்குள் ஒரு மூலையில் இருந்தவாறு விளையாடக்கூடியவை. உடலுக்கு எந்தவிதமான நன்மைகளையும் கொடுக்காது சிறுவர்களின் ஆரோக்கிய வாழ்வையே முடக்கிவிடும் வகையிலேயே இவை காணப்படுகின்றன. உடற்பயிற்சியும், வெளியக விளையாட்டுகளும் ஆரோக்கிய வாழ்விற்கு அவசியமென்பதை வலியுறுத்தும் விளக்கக் கட்டுரை.

ஆ. நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோகம் எமது நாட்டில் அதிகரித்த வண்ணமே உள்ளது. தமது உரிமைகள் பற்றி சிறுவர்களுக்கு போதிய விழிப்புணர்வின்மையும் பெரியோர்கள் சிறுவர்களின் விலை மதிப்பற்ற தன்மையை உணராமையுமே அடிப்படைக் காரணங்களாகின்றன. சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிப்பதன் அவசியம் பற்றி இருவருக்கிடையிலான உரையாடல்.

The National e-Learning Portal for The General Education

இ. ஏட்டிலே எழுதப்பட்ட தமிழ் மொழி அச்சு வாகனம் ஏறி நூல் வடிவம் பெற்றது. இணையத்தின் வருகையால் தமிழ் மொழி புத்துயிர் பெற்றுள்ளது. தமிழ் மொழியின் அழிவுக்கு முற்றுப்புள்ளி வைத்த பெருமை நவீன தொழிநுட்ப சாதனங்களையே சாரும் என்ற தொனிப்பொருளில் நீர் ஆற்றும் மேடைப் பேச்சு.

ஈ. இரண்டு தங்கைமாரைப் படிக்க வைக்க வேண்டும். வீட்டின் வாடகைச் செலவு உட்பட முழுச்செலவு என குடும்பத்தின் முழுப் பொறுப்பையும் வீட்டின் முதற் பிள்ளையான கமலனே சுமக்க வேண்டிய நிலை. உயர்தரக் கல்வி கற்கும் போதே வேலைக்கு சென்றவனை வெளிநாட்டு மோகம் பற்றிக் கொண்டது. வெளிநாடு பற்றி அவன் கொண்டிருந்த கனவுகள் இடை வழியிலேயே கரைந்தன. தாய் நாட்டிற்கும் செல்ல வழியின்றி அவனும் சிலரும் திசை தெரியாத தீவில் அல்லலுற்ற நிலையில் ..................... என்ற மையக் கருவைக் கொண்ட சிறுகதை.

(25 புள்ளிகள்)

**(03) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)**

எழுத்துக்களால் சொல்லும் சொற்களால் மொழியும் அமைகிறது. மொழி வளர்ச்சியின் அளவு கோலைக் கொண்டே சில சமயம் அம்மொழி பேசும் மக்களின் மனவளர்ச்சி முன்னேற்றம் கணிப்பிடப்படுவதும் உண்டு. ஏனெனில் மக்களின் வாழ்க்கைச் சூழல், சிந்தனைத் திறன், முயற்சி வேகம் ஆகியவற்றை அடியொற்றியே அவர்களின் முன்னேற்றம் அமையும். அம்முன்னேற்றத்திற்கு எல்லா வகையிலும் வேக முடுக்கியாக இயங்கி வருவது மொழியும் அம்மொழியின் வளர்ச்சிக்கு ஆதாரமான செயற் பெருக்கமும் ஆகும். வளர்ச்சிப் போக்கில் புதிய கருத்தையோ அல்லது உணர்வையோ ஏதேனுமொரு சொல் வடிவில் மனிதன் மற்றவர்கட்கு உணர்த்த முற்படுகிறான். இவ்வாறு கருத்து புதிய சொல் காரண அடிப்படையில் அமைந்த சொல்லாகவோ அல்லது அடையாளம் காட்டும் இடுகுறிச் சொல்லாகவோ அமையும்.

மேலும் ஒரு பகுதியினர் வேறொரு பகுதியைச் சார்ந்த வேறு மொழி பேசும் மக்களோடு உறவாடும் போது அவர்களிடமிருந்து புதிய செய்திகளை அல்லது கருத்துக்களை பெற வாய்ப்பேற்படுகிறது. அத்தகைய கருத்தையோ, செய்தியையோ குறிக்கும் சொற்களும் இயல்பாகவே அவர்தம் மொழியில் இடம் பெற நேர்கிறது.

இவ்வாறு ஒவ்வொரு மொழியும் தனக்குத்தானே உருவாக்கி கொண்டும் சொற்களோடு பிறமொழிச் சொற்களையும் காலப்போக்கில் ஏற்றுக் கொண்டு வளர்கின்றது. இவ்வாறு ஒரு மொழியில் வந்து சேரும் சொற்கள் எந்த மொழியில் வந்து சேர்கிறதோ அந்த மொழியின் இயல்புக்கும் இலக்கண விதி முறைக்குமேற்ப திருத்தங்களைப் பெற்று செம்மையடைகின்றன. காலப்போக்கில் இத்தகைய சொற்கள் அம்மொழியின் மூலச் சொற்கள் போன்ற தோற்றத்தையும் பெற்று விடுகின்றன.

(10 புள்ளிகள்)

**(04) பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

*மக்கள் தீயன செய்யாமைக்கு மூன்று காரணங்கள் உள. முதலாவது வாய்ப்பு இன்மை; இரண்டாவது அச்சம்; மூன்றாவது அவை தகாதன என்ற உணர்ச்சி. ஒருவன் களவு செய்தலிலே எந்நாளும் ஈடுபடுகின்றான். பின் சில நாள் வசதியின்மையால் களவு செய்யாதிருப்பானேல் நல்லவன் என்ற பெயரை பெற்று விடுகிறான். அன்று முதல் அதனை விட்டு நல்லவன் ஆகிறான். அவனும் தண்டனைக்குப் பதில் சன்மானம் பெறுவானேல் அக்களவை மேலும் செய்வான். ஆகவே அவனை நல்லவனாக்கியது அச்சம். வேறொருவன் களவு செய்தல் தவறானது, தீயது என வெறுத்து விலக்கியொழிகிறான். அதனால் அவன் நல்லவன் ஆகிறான். அவன் களவு செய்யும்படி எத்துணை உபகாரம் செய்யினும் அதனை ஒரு போதும் செய்யத் துணிணான். ஆகவே அவன் என்றும் நல்லவன் என்ற பெயரரோடு இருக்கிறான். இது போலவே அறத்தைச் செய்தலிலும் பலர் பயன் குறித்தும் சிலர் நல்லது என்ற ஒரே காரணம் குறித்தும் ஈடுபடுகின்றனர். பயன் குறித்துச் செய்பவரினும் நல்லது என்ற ஒரே காரணத்திற்காக செய்பவர் என்றும் மிக்க பெயரும் புகழும் பெறுவர். பயன் குறித்துச் செய்பவரினும் நல்லது என்ற ஒரே காரணத்திற்காக செய்பவர் என்றும் மிக்க பெயரும் புகழும் பெறுவர். பண்டைக்காலத்து வள்ளல்களிற் பலர் அவ்வாறு நல்லாற்றினின்றவரே. ஆய் என்ற மன்னன் அவ்வாறு பயன் கருதாது அறம் செய்தானென்று ஒரு பழைய செய்யுள் கூறும் வள்ளுவரும் மாரியின் உதவியை வாயாரப் புகழ்கின்றார். உதவிகளில் எல்லாம் மேலானது பயன் கருதாத உதவியேயாகும்.*

1. *மக்கள் தீய செயல்களில் ஈடுபடுவதற்குரிய காரணங்கள் எவை?*
2. *உலகில் நீண்ட காலம் பெயரும், புகழும் பெறுபவர் யார்?*
3. *பந்தியில் வலியுறுத்தப்படும் கருத்து யாது?*
4. *வாயாரப் புகழ்தல் என்பதன் பொருள் யாது?*
5. *வள்ளல், மாரி என்பவற்றுக்கான எதிர்ப்பொருட் பதங்களைத் தருக.*

(10 புள்ளிகள்)

**(05)** *போதைப் பொருள் பாவனை அதிகரிப்பின் அபாயம் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் அமைந்த 100 சொற்கள் கொண்ட துண்டுப்பிரசுரம் தயாரிக்க.*

**அல்லது**

*உமது பாடசாலையின் முத்தமிழ் விழாக்குழுவின் செயலாளராக உம்மைக் கருதிக் கொண்டு பாடசாலையில் நடைபெறவிருக்கின்ற முத்தமிழ் விழா தொடர்பான செய்தியைப் பிரசுரிப்பதற்கான 100 சொற்களில் பத்திரிகைச் செய்தி ஒன்று எழுதுக.*

(15 புள்ளிகள்)

The National e-Learning Portal for The General Education

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# இரண்டாந் தவணைப் பரீட்சை - 2017

| தரம் : 11 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் : 2.00 மணி |
|---|---|---|
| | பெயர் / சுட்டெண் ............................................... | |

## பகுதி - III

* **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
* **1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**

**(01) சுருக்கமான விடை எழுதுக.**

1. "மஞ்சோனா மரத்திலிருந்து இப்போது தான் பக்குல் பறந்து போனது"
   அ) "மஞ்சோனா மரம்" என்பதன் திருத்தமான வடிவம் யாது?
   ஆ) 'பக்குல்' எனும் பறவையைக் குறிக்கும் வேறு பெயர் ஒன்று தருக.

2. "இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்
   வென்றெறி முரசின் வேந்தரெம் குன்றுங்கொண்டார்..."
   அ) இங்கு முரசின் வேந்தர் யாவர்?
   ஆ) "எம்குன்று" என்பதில் குறிப்பிடப்படும் குன்று எது?

3. "கூனலிளம் பிறை முடித்த வேணியலங்காரர்
   குற்றாலத் திரிகூட மலை யெங்கள் மலையே"
   அ) வேணி என்பதன் பொருள் யாது?
   ஆ) குற்றாலநாதரின் சிறப்பு யாது?

4. ஈமச்சேர் மாலை போல இழிந்திடப்பட்ட செயலாகும்"
   அ) இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள அணி யாது?
   ஆ) "ஈமச்சேர் மாலை" என்பதன் கருத்து யாது?

5. ........... கோக்கள் வைகும்
   முற்றத்தான் முதல் தேவி
   அ) கோக்கள் வைகும் முற்றத்தான் யார்?
   ஆ) முதல்தேவி என சிறப்பிக்கப்படுபவர் யார்?

6. பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்
   டூதியம் போகவிடல்.
   அ) பேதைமை என்பதன் கருத்து யாது?
   ஆ) பேதையர் செயல் யாது?

7. "என்னத்துக்கு, இந்த வண்டிலுக்கு குடிலப் போல ஓல கட்டினீங்க" கேட்டன், மழ வெய்யில்ல நனயாம அவவக் கொண்டு போகணும்"
   அ) "அவவ" என்று குறிப்பிடப்படுபவர் யார்?
   ஆ) இவ்வரிகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் உணர்வு யாது?

8. இஞ்சால வா மகன் மையத்த தூக்கப் போறாக.
   அ) இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டுள்ளது?
   ஆ) மையத்து என்பதன் கருத்து யாது?

9. "ஆடிக்குடத்தடையும் ஆடும் போதே இரையும்......

அ) இப்பாடலில் காளமேகப் புலவரால் ஒப்பிடப்படும் பொருள்கள் யாவை?

ஆ) இப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள அணி யாது?

10. "வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே"

அ) கரும்பிறை என்பது யாரைக் குறிக்கிறது?

ஆ) அப்பிறைக்கும் என்பதன் பொருள் யாது?

(20 புள்ளிகள்)

**(02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

(i) முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்
கிழங்கு கிள்ளித் தேனெடுத்து வளம் பாடி நடிப்போம்.
கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை யிடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்கு கொடை மகராசர் குறும்பலவி னீசர்
வளம் பெருகும் திரிகூட மலையெங்கள் மலையே

அ) இப் பாடலில் அருவியின் செயற்பாடு யாது?

ஆ) குற்றாலநாதருடைய சிறப்பு யாது?

(ii) நைவீர லீர்மைந்தீ ரினித் துயரா
னாடிறந்து காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற்
றாமன்றே விலங்கற் றிண் டோட்
கைவீரக் களிறனைய காளையிவன்
றன்னோடு கலந்து நீங்க
ளைவீரு மொருவீரா யகலிடத்தை
நெடுங்கால மளித்தி ரென்றாள்.

அ) இப்பாடலில் குகனின் சிறப்பு யாது?

ஆ) ஐவீர் எனப்படுவோர் யாவர்?

(iii) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு

அ) அடக்கமுடையாரது இயல்பு யாது?

ஆ) மடைத்தலை என்பதன் கருத்து யாது?

(iv) என் அருமைச் செல்வங்களே...... புறப்பட வேண்டியது தான் பறம்பு மலையின் இனிய சுனை நீரில் ஒரு முடக்கு குடியுங்கள். கடைசியாக முடிந்த மட்டுக்கும் இந்த மலைப் பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக் கொள்ளுங்கள். கடந்து செல்கையில் காற்று வீசும். ஆனால் இந்த மலைப் பூக்களின் மணம்.......... பறவைகளின் ஒலி ஓயாது. பாரி இருந்தால் பேச்சுக் கொடுப்பார்..... புறப்படுகிறோம். பறம்பே...... மதுவிலும் புலாலிலும் களித்திருந்த நட்பு நம்முடையது.

அ) இக் கூற்று எத்தகைய மனநிலையில் கபிலரால் கூறப்பட்டது?

ஆ) பாரியிடம் கபிலருக்குள்ள ஈடுபாடு எவ்வாறு புலனாகின்றது?

(v) இனந்தெரியாத அச்சம் என்னைக் கவ்விக் கொண்டது. மூத்த வாப்பா குளிர் காய தீ மூட்டினார். என் வெள்ளைக் கொக்கு வெடவெடுத்தது. சந்தனம் அரைத்து உச்சந்தலையில் பூசினார். அன்னாவி மாமா வந்து ஓதிப் பார்த்தார். ஒரு ரூபாய் குற்றியை வெள்ளைத் துணியில் சுற்றிக் கட்டி, உச்சவட கல்லு அவுலியாவுக்கு நேர்ந்து வைத்தார்.

அ) வெள்ளைக் கொக்காக உருவகப்படுத்தப்பட்டுள்ளவர் யார்?

ஆ) இங்கு கூறப்பட்டுள்ள பழமையான நம்பிக்கைகள் யாவை?

*(5 × 4 = 20 புள்ளிகள்)*

(03) மூத்தம்மா சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு

அ) மூத்தம்மாவின் குணவியல்பு.

ஆ) கிராமத்தில் காணப்படும் வாழ்வியல் அம்சங்கள் என்பவற்றை விளக்குக.

**அல்லது**

"குழந்தை என எனது மனம் குதூகலிக்கும்" என்ற கவிதையில்

அ) மருத நிலச் சிறப்புக்கள்.

ஆ) விலங்கு, பறவைகளினதும் செயற்பாடுகள் என்பவற்றைத் தெளிவுபடுத்துக.

*(15 புள்ளிகள்)*

(04) அற்றைத் திங்கள் நாடகத்தில்

அ) மலையின் இயற்கை அழகு

ஆ) பாரி மகளிர் துயரம்

என்பன எடுத்துக் காட்டப்படுமாற்றை விளக்குக.

**அல்லது**

இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையின் அடிப்படையில்

அ) அரிச்சந்திரன்

ஆ) தர்மன்

இ) தசரதன்

ஆகியோரின் இலட்சியங்கள் பற்றி விளக்குக.

*(15 புள்ளிகள்)*

☞ **5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை தருக.**

(05) "சீறி ஓடாத வருங்கால மனித நதி" என்ற கவிதையில்

அ) இளைஞனின் தோற்றமும்

ஆ) கல்லாத அவ்விளைஞன் பற்றிய கவிஞரின் மனநிலையும்

வெளிப்படுமாற்றை விளக்குக.

*(10 புள்ளிகள்)*

(06) நாட்டார் பாடல்கள் பகுதியில்

அ) ஏர்ப்பாடலின் ஊடாக வெளிப்படும் சிந்தனைகள்.

ஆ) காதற் பாட்டில் ஆழமான காதல் உணர்வுகள்.

என்பன புலப்படுமாற்றை விளக்குக.

*(10 புள்ளிகள்)*

(07) தனிப்பாடல்களை ஆதாரமாகக் கொண்டு

அ) கழியும் பிழை பொருட்டள்ளி என்ற பாடலில் காளமேகப் புலவரின் கவித்திறம்

ஆ) சீதக்காதி வள்ளலின் கொடைச்சிறப்பு

என்பனவற்றை விளக்குக?

*(10 புள்ளிகள்)*